பொத்தாம்பொதுவாக நாம் எல்லா இடத்திலேயும் ஆரம்பிப்பது என்பது சாத்தியம் அல்ல. எனவே, CII, ELCOT சேர்ந்து, அவர்கள் ஆராய்வு மேற்கொண்டதன் அடிப்படையில்தான் அங்கு வந்து அமைக்கக்கூடிய அளவிற்கு, அங்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன என்ற கருத்தைச் சொன்னதன் அடிப்படையிலே, நிலங்கள் எல்லாம் கையகப்படுத்தப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, எவ்வளவு விரைவில் இது வர முடியுமோ, அந்த அளவிற்கு விரைவில் வருவதற்கு வேண்டிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 5, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

5—

பகுதிநேர நியாய விலைக் கடை

***20487—திரு. கு. அண்ணாமலை:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவுடையனூர் ஊராட்சி, சின்னநாடானூரில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலாவதாக, என்னை இந்த அவையிலே அமைச்சராக்கி, உறுப்பினர்களுடைய கேள்விக்குப் பதில் அளிக்க நல் அனுமதியைத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவன்பான நன்றியினை அவர்களுடைய பாதங்களிலே காணிக்கையாக்கி, உறுப்பினருடைய கேள்விக்கு விடையளிக்கிறேன்: (அ) இல்லை. (ஆ) கேள்வி எழவில்லை.

2005 பிப்ரவரி 2]

திரு. கு. அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆவுடையனூர் கிராமம், சந்தனகுமார்பட்டியில் இயங்கி வரும் நியாய விலைக் கடையில் சுமார் 1,500 குடும்ப அட்டைகள் உள்ளன. எனவே, இக்கடையில் இணைக்கப்பட்டுள்ள சின்னநாடானூர், அழகம்பெருமானூர், ராயப்பநாடானூர், கோட்டவளையூர், சண்முகபுரம், சுப்பிரமணியபுரம், காமராஜ் நகர், குபேரப்பட்டினம், மருதடியூர், சாலடியூர், சின்னக்காண்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள சுமார் 600 ரேஷன் கார்டுகளை சின்னநாடானூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு முழுநேரக் கடையோ அல்லது பகுதிநேரக் கடையோ வரும் நிதியாண்டிலாவது அமைத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஆவுடையனூர் ஊராட்சியில் இரண்டு முழுநேர நியாய விலைக் கடைகளும், ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தென்காசி வட்டம், ஆவுடையனூர் ஊராட்சியில் உள்ள சின்னநாடானூர் கிராம மக்கள் ஆவுடையனூர் கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். ஆவுடையனூர் கிராமத்திலிருந்து 1.5 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள சின்னநாடானூர் கிராமத்தில் 152 குடும்ப அட்டைகள் முன்பு இருந்தன. இப்போது 93 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடை அமைக்கக் குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும், மற்றும் இரண்டு நியாய விலைக் கடைகளுக்குமிடையே குறைந்தது 2 கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும் என்பதுபோன்ற நிபந்தனைகள் நிறைவுபெறாததால், சின்னநாடானூர் கிராமத்தில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் திறப்பது பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இரண்டு கிலோ மீட்டர் தூரம் இடைவெளி இல்லை என்று குறிப்பிடப்படுவதாக இங்கே சொன்னார்கள். ஆனால் பல இடங்களில் நான்கு கிலோ மீட்டர், ஐந்து கிலோ மீட்டர் அளவுக்குக்கூட இடைவெளி இருக்கிற

இடங்களில் கேட்டால், கிடைப்பதில்லை. இப்படி என்னுடைய தொகுதியிலேயும் இருக்கிறது. பக்கத்திலே இருக்கிற நம்முடைய திருத்துறைப்பூண்டி உறுப்பினர் மாண்புமிகு திரு. ஜி. பழனிசாமி அவர்கள் தொகுதியிலேயும் இருக்கிறது. என்னுடைய சொந்தக் கிராமத்திலேயும் இப்படி இருக்கிறது. (குறுக்கீடு) தமிழ்நாடு முழுமையிலும் இருக்கிறது. அப்படிச் சொன்னால் தப்பாக எடுத்துக்கொள்வார்கள், அதற்காகத்தான் இப்படிச் சொன்னேன். ஆகவே இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். இது அதிகாரிகளால் தயாரிக்கப்படுகிற பதிலாக இருக்கிற காரணத்தினாலே, அங்கே இருக்கிற, அனுபவரீதியாக இருக்கிற, நடைமுறையில் இருக்கிற உண்மை நிலைகள் வரவில்லை என்பது என்னுடைய பணிவான கருத்து. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். எல்லா இடங்களுக்கும் அந்த நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்குரிய அனுமதி வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே உணவுப் பொருட்கள் வழங்குவதிலே சிறந்து விளங்குகின்ற மாநிலம் தமிழகம் என்று இன்றைக்கு இந்தியாவினுடைய அனைத்து மாநிலங்களும் பாராட்டிக் கொண்டிருக்கின்றன. 200 குடும்ப அட்டைகளுக்கு, தனியாக பகுதிநேரக் கடைகளை நடத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தொகுதியிலே சாத்தியக்கூறுகள் இருக்கின்ற இடத்தினைக் குறிப்பிடுவார்களேயானால், அது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பகுதிநேர நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, 200 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருந்தால் அமைக்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்தார்கள். என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதுபோன்ற வாய்ப்பு இருக்கின்றபோது, அந்த 2 கிலோ மீட்டர் தூரம் இடைவெளி என்ற அந்த விதிமுறைகளுக்குட்பட்டு வருகின்றபோது, அந்த உத்தரவை, வழங்கக்கூடிய அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கே அரசு வழங்குமா என்பதை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

2005 பிப்ரவரி 2]

ஏனென்று சொன்னால், இதிலே மாவட்ட வழங்கல் அதிகாரியிடமிருந்து இந்தக் கருத்துரு பெறப்பட்டு, அதற்குப் பின்னாலே இங்கே அரசு வரைக்கும் வருகின்றபோது மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. இப்போது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே மிகப் பெரிய சாதனையாக, வறுமைக் கோட்டுக்குக்கீழே இருக்கக்கூடிய அத்தனை பேருக்குமே, குடும்ப அட்டைகள் கேட்ட அத்தனை பேருக்குமே இன்றைக்கு பல இலட்சக்கணக்கான குடும்ப அட்டைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது குடும்ப அட்டைகள் அதிகப்படியாக ஆகிவிட்ட காரணத்தினால், பகுதிநேர நியாய விலைக் கடைகளையும் மிக அதிகமாகத் தொடங்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதை அரசு செய்து தருமா என்பதை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 200 குடும்ப அட்டைகளுக்கு மேலாகவும், 2 கிலோ மீட்டர் இடைவெளிக்குக் கூடுதலாகவும் இருக்கின்ற பகுதிகளிலே நியாய விலைக் கடைகளை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே திறந்துகொள்வதற்கு, முன்பே அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்கள், தமிழகத்திலே ஒட்டுமொத்தமாக 37,70,446 ரேஷன் கார்டுகள் வழங்கியிருக்கிறார்கள். அதில், திருப்பூர் தொகுதியில் மட்டும் சுமார் 89 ஆயிரம் ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு புதிய ரேஷன் கார்டுகள் வழங்கியமைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பூர் தொகுதியில், கூடுதலாக 89 ஆயிரம் ரேஷன் கார்டுகள் வழங்கி இருக்கிற காரணத்தினால், அங்கே இருக்கக்கூடிய ரேஷன் கடைகளினுடைய எண்ணிக்கை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், ஒட்டுமொத்தமாக தமிழகம் முழுவதும் வழங்கியிருக்கக்கூடிய ரேஷன் கார்டுகளினுடைய இந்த எண்ணிக்கையையும் கவனத்திலே கொண்டு,

இருக்கின்ற ரேஷன் கடைகளையெல்லாம் பிரிப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 200 கார்டுகள் ஒரு பகுதியிலே இருக்குமேயானால், அந்த இடத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரே பகுதிநேரக் கடையைத் திறப்பதற்கு, ஏற்கெனவே அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது; அரசாணையும் அதற்கு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், எந்த மாவட்ட ஆட்சித் தலைவரும் அந்த risk-ஐ எடுக்க விரும்புவதில்லை. அவர்கள் மீண்டும் அந்த file -ஐ உங்களுக்கே அனுப்பி, எவ்வளவு காலந்தாழ்த்த முடியுமோ, அப்படித் தாழ்த்துகிற ஒரு சூழல் இன்று பல பகுதிகளில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஒரு நல்ல அறிவுறுத்தலை மீண்டும் ஒரு முறை ஏற்படுத்தி, இப்போது புதிய கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கிற இந்தச் சூழலில், பல இடங்களிலே 200 கார்டுகள் வந்து சேர்ந்துவிட்டன. அப்படிச் சேர்ந்துவிட்ட சூழலையும் நீங்கள் கணக்கில் எடுத்துக்கொண்டு, அந்தப் பகுதிகளைக் கணக்கெடுத்து, கோரிக்கை வருகிறதோ, இல்லையோ, அரசே பகுதிநேரக் கடைகளை ஆங்காங்கே திறப்பதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளில் கடைகளை இரண்டாகப் பிரித்து, பகுதிநேரக் கடைகளை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புகிறார்களோ, அதுகுறித்து அந்தந்த மாவட்ட ஆட்சியரிடத்திலே தகவல் கொடுத்து, விண்ணப்பித்தால், அதுகுறித்து அரசு உடனடியாகப் பரிசீலிக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 6, திரு. வெ. கோவிந்தராஜ், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.